RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S117

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Changes in Lifestyle in a Contemporary Environment-Communication

## சமகாலச் சூழலில் வாழ்வியல் மாற்றங்கள் - தகவல் தொடர்பு

**M. Selvakumar [a,*], M. Mahalakshmi [a]**

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts & Science, Thellar, Tiruvannamalai-604408, Tamil Nadu, India.

*Corresponding author Email: mselvam84enator@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S117

Received: 13-04-2022; Revised: 09-07-2022; Accepted: 15-07-2022; Published: 19-08-2022

**Abstract:** In today's era, if the world stops itself at one central point and directs itself along its path, then it must be said that it is information. Information is an easy-to-understand format, ranging from everyday applications of information to objects with an industrial background. Information is a form of notification of a specific message. Every action in our daily life has a history, and its beginning is also coming into our life. If we look back and relate it, today's days are moving as a result of the action taken. In this way, in today's contemporary situation, the changes in lifestyle due to information communication and the changes in communication in previous times can be seen in detail in this article. Through this article, we can see what kind of connection the king's majesty and the witness of the life of the monitor have made in today's contemporary environment.

**Keywords:** Biological Changes, Communication, Contemporary Context, Sangam Literature

**Language:** Tamil

## முன்னுரை

அன்றாட வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலும் ஒரு வரலாறாகவும் அதன் தொடக்கம் நமது வாழ்வியலாகவும் வந்து கொண்டிருக்கிறது. சற்றுப் பின்னோக்கி அதனை தொடர்புபடுத்திப் பார்த்தால் செய்யப்பட்ட செயலின் பயனாக அல்லது அதன் விளைவாக இன்றைய நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும்.

அவ்வகையில் இன்றைய சமகாலச் சூழ்நிலையில் தகவல் தொடர்பினால் வாழ்வியலின் மாற்றங்களையும், முந்தைய காலங்களின் தகவல் தொடர்பின் மாற்றங்களையும் அந்தத் தொடர்பின் தகவல்களால் ஆன இன்றைய தகவல் தொடர்பினைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாக காணலாம். மன்னரின் மாட்சியும், அக்கால மானிடரின் வாழ்வின் சாட்சியும் எத்தகைய தகவல்களை இன்றைய சமகாலச் சூழலில் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் இக்கட்டுரை மூலம் காணலாம்.

## தகவல்

இன்றைய காலகட்டத்தில் உலகமே ஒரே மையப்புள்ளியில் தன்னை நிறுத்திக் கொண்டு அதன் வழியில் அதனோடு தன்னை இயக்கிக் கொண்டிருக்கிறது என்றால் அது தகவல் என்று தான் சொல்ல வேண்டும்.

தகவல் (Information) என்னும் அன்றாட பயன்பாடுகளிலிருந்து தொழில் நுட்பப் பின்புலம் கொண்ட பொருள்கள் வரை பல்வேறு பொருண்மை பரவல் கொண்டதாக இருந்தாருலும் எளிமையாக அறியும் வகையில் அமைந்த ஒன்றாகும். தகவல் என்பது குறிப்பிட்ட செய்தியின் அறிவிப்பு வடிவம் ஆகும்.

தகவல் என்பது பெறுனர்களால் பெறப்படும் செய்திகளில் அடங்கிய உள்ளடக்கம் எனலாம். இவை காணும் ஏதே ஒன்றைப் பற்றியதாக அமையலாம். இவ்வகையில் நோக்கும் போது தகவல்

என்பது துல்லியத் தன்மை கொண்டிருக்க வேண்டியதில்லை. இது உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம். அல்லது மரமொன்றின் ஒலியாகக் கூட இருக்கலாம். பொதுவாக கிடைக்கும் செய்தியில் உள்ள தகவலின் அளவு கூடும்போது அதன் துல்லியத் தன்ணையம் மிகும்.

## தொடர்பியல் (Communications)

தகவல் பரிமாற்ற சாதனங்களையும் அவற்றிற்குரிய கருத்துப் பொருட்கள் அடிப்படைகளையும் ஆயும் இயல் தொடர்பியல் (Communications) ஆகும். தொடர்பியல் இயற்பியல், கணிதம், இலத்திரனியல் கணிணியியல், தகவல் தொழிற்நுட்பம் ஆகிய இயல்களுடன் நெருங்கிய தொடர்புடையது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று தகவல் பரிமாற்றம் பேச்சு மொழி, எழுத்து, அச்சு, தூது (மனிதன் புறா) புகை சைகை, முரசு, தொலைவரி தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கணிணி எனப் பல நுட்ப முறைகளை தகவல் பரிமாற்றத்திற்கு பன்படுத்தப்படுகின்றது.

1948- ஆண்டு பெல் ஆய்வுக்கூட விஞ்ஞானியாக கிளாட் நு. ஸானான் அவர்களின் தொடர்பியலின் கணிதவியல் கோட்பாடுகள் என்ற ஆய்வுக் கட்டுரை இத்துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது, (Abhirami, 2002).

## தகவல் தொடர்பு

இதில் 'தகவல்' - 'தொடர்பு' என்ற இரு சொற்கள் இணைந்து தகவல் தொடர்பு என வந்துள்ளது. பொதுவாக தகவல் என்பது பிறர் அறியும் வகையில் எடுத்துரைக்கும் அல்லது வெளிப்படுத்தும் செய்தியாகும். தொடர்பு என்றால் இரு இடங்களை இணைப்பது என்று பொருள்படும்.

அதாவது தகவல் தொடர்பு என்பது இங்குள்ள செய்தியினை மற்றவரிடத்தோ அல்லது வேறு இடத்திற்கோ தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப்பயன்படும் ஒரு முறை எனலாம். எனவே இரண்டு இடங்களை தன்னுடைய தகவல்களால் இணைத்து அங்குள்ளவர்கள் அறியும் வண்ணம் செய்திகளை இடமாற்றிக் கொள்ளும் வழிமுறை மற்றும் அதற்கான கருவிகளுக்குத் தகவல் தொடர்பு என்ற தொழில் நுட்பச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

## பண்டைய கால தகவல் தொடர்பு

இன்று நேற்றாகி காலமென்னும் பெயரில் நிரந்தரமாக வருகிறது. மனித வாழ்வை, வரலாற்றை நிர்ணயிக்கும் மாபெரும் சக்தி காலம். ஏனெனில் காலம் ஒரு உலக மகா பேராசிரியன். அவன் புகட்டும் பாடங்களுக்கு நிகராக இதுவரை யாருமே எப்போதுமே புகட்டியது கிடையாது. இன்று எனும் ஒவ்வொரு நாளிலும் நடக்கும் நிகழ்ச்சிகளும் கால சக்தியுடன் கலந்து வரலாற்று முத்திரை பெற்று விடுகின்றன. அவ்வாறான வரலாற்றுச் செய்திகள் நடந்திடும் பொழுது இவை பிற்காலத்தில் பெரிய வரலாறாக மாறும் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள் (Venkataraman, 2008).

அவ்வாறாக நினைவு கூறப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செய்திகள் யாவும் பெரும்பாலும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டன. அவை பெரும்பாலும் ஆளும் மன்னர்களின் ஆட்சியின் வரலாற்றைக் குறிப்பிடுவனவாகவே அமையப்பட்டன. அவர்களின் வெற்றிகளையும், கலை, பண்பாடுகளையும் குறிப்பிடுனவாகவே அமைந்தது (Chenthee Natarajan, 2016).

உதாரணமாக பல்லவர்களைப் பற்றிய சிற்பங்களையும் அவற்றிக்கு தொடர்பான கல்வெட்டுகளையும் மாமல்லபுரத்திலும் தஞ்சை பெரிய கோவிலின் அடிச்சுவற்றில் சோழர் மன்னன் ராஜ ராஜ சோழனின் படை வீரமும் கொடையும் பற்றியும் செய்திகளை கல்வெட்டுகளில் செதுக்கி நமக்கு அப்போதைய பண்டைய கால வரலாற்றினை இந்தத் தகவல் தொடர்பின் மூலமாகக் கொடுத்து சென்றுள்ளனர்.

மேலும் மன்னர் கால ஆட்சியில் தகவல் தொடர்பானது மனிதர்களையும் பறவைகளையும் ஒட்டியே அமைந்துள்ளது. மனிதர்கள் வேறு வேடம் புகுந்து ஒற்றர்களாக செய்திகளைக் கொணர்வதும் தன்னுடைய செய்தியினை மற்ற நாட்டின் மன்னர்களுக்கோ அல்லது மன்னர்கள் தனது பட்டத்து மகா

ராணிக்கோ தெரியப்படுத்த தங்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள புறாவினைப் பயன்படுத்தியுள்ளனர்.

## பக்தி இலக்கிய காலத்தில் தகவல் தொடர்பு

வரலாறும் ஒரு நிரந்தரமான சுழல் சக்கரம் தான். அது தானாகவே எந்த நிகழ்ச்சியையும் புதிதாக அரங்கேற்றுவதில்லை. பக்தி முயற்சிகளின்படி அது ஏற்கனவே எழுதப்பட்டவையாகும். சில நிகழ்ச்சிகள் அப்படியே திருப்பி நடத்திக் காட்டுவதுமுண்டு. சில நிகழ்ச்சிகளைத் திரித்தும், மறைத்தும் ஒப்பனை செய்தும் காட்டுவதுமுண்டு. முன்பு கூறியது போல தகவல் என்பது துல்லியமானதாகத்தான் இருக்கும் என்பதில் உண்மையில்லை (Abhirami, 2002).

அத்தகைய நிகழ்ச்சிகளின் கோவைதான் மனித வளர்ச்சியைக் காட்டும் காலக் கண்ணாடியாய் மனிதனின் உள்ளத்தின் கண் மனசாட்சியாய் இறைவனை வழிபட்டு அறத்தின் வழியாய் செவ்வனே வாழ்வினை வாழ பல நூல்கள் இயற்றப்பட்டன. பக்தி இலக்கிய காலங்களில் அவ்வகையான நூல்கள் ஓலைச் சுவடுகளிலும் கல்வெட்டுகளிலும் கிடைக்கப் பெற்றதாயின் நாம் இன்று பயன்பாட்டிற் கொள்ள முடிகிறது. ஓரிடத்தில் இயற்றப்பட்ட நூல்களை வேறொரு இடத்திற்கு பரிமாறிக் கொள்ள இன்றைய நாட்களில் உள்ளது போல அன்றைய நாட்களில் இல்லை.

உதாரணமாக சைவ சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் ஒவ்வொரு திருத்தலங்களாகச் சென்று இறைவனின் அருளையும் அன்பையும் மக்கள் அறியம் வகையில் தாங்களே அங்கு தகவல் தொடர்பாக இருந்துள்ளனர்.

தேவாரம் கூறும் ஏழு திருமுறைகளில் மூன்றாம் திருமுறையான தலைமுறையில் மூவரில் ஒவ்வொருவர் பதிகங்களையும் தனித்தனியாக வைத்துத் தலங்கள் வாரிஓயாகத் தொகுத்து அடைவு செய்து கோவில், திருவேட்களம் முதலாகத் திருப்பதிகக் கோவையிற் குறித்த முறையொட்டித் தேவாரப் பாடல் பெற்ற தலங்களையெல்லாம் தில்லைப் பெருங்கோவில் முதலாக வரிசைப்படுத்தி, தேவார மூவரின் பெருமையோடு அறிந்துகொள்ள அக்காலத் தகவல் தொடர்பாக பக்தி இலக்கிய நூல்கள் அமைந்துள்ளன (Keerthi, 2014).

## சமகாலச் சூழலில் தகவல் தொடர்பு

இவ்வாறாக பண்டைய காலம், பக்தி இலக்கிய காலம் எனத் தகவல் தொடர்பினை கண்டாலும் இன்றைய சூழலில் தொழில்நுட்ப, அறிவியல் வளர்ச்சியின் காரணமாக தகாவல் தொடர்பானது இருபதாம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு விதமான பரிணாமத்தைக் கண்டுள்ளது. நாமும் அதைப் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

இத்தகைய தகவல் தொடர்பு அரசியல், அறிவியல், இலக்கியம். கலை, போர் முதலான 5 அம்சங்கள் (பஞ்சாங்கம்) உள்பட கல்வி, பண்பாடு, மருத்துவம், மானுடவியல், உளவியல், வணிகம் என அனைத்தையும் தன்னகத்தே ஒருங்கே வைத்துக் கொண்டும் தன் மூலமாக அனைத்தையும் நடத்திச் செல்லும் ஓர் அறியதாய் விளங்குவது இன்றைய அறிவியல் தொழில் நுட்பத்துடன் கூடிய தகவல் தொடர்பு ஆகும் (Srinivasan, 2009).

இன்றைய சர்வதேச நோய் பரவல் (Pandemic) காலச் சூழலில் உலகமே உள்ளடக்க நேரத்தில் ஆழந்திருந்து செய்வதரியாது முடங்கியிருந்த நேரத்தில் தகவல் தொடர்பு சாதனங்களான தொலைகாட்சி, வானொலி, இணையம் செல்லிடைப்பேசி போன்றவைகளின் வழியே கல்வி, இயற்கை வைத்தியம் உள்ளிட்ட பல வகையான மருத்துவ உதவி உணவு வாழ்வியலுக்குத் தேவையான உதவிகள் போன்றவைகளைப் பெற உதவியது. உலகளாவிய அறிவை உள்ளங்கையில் தொடுதிரையினுள் காணக் செய்து வருகிறது இந்த தகவல் தொடர்பு சாதனங்கள்.

## வணிகத்தில் தகவல் தொடர்பு

இன்றைய நாளில் கடல் தாண்டிய தொழில்களை இப்பொழுது இருக்கும் இடத்திலேயே செய்துவிடக்கூடிய சூழலைத் தகவல் தொடர்பு செயலிகள் அமைத்துவிட்டன. சாதாரண மனிதனும்

சாதிக்கலாம் என்ற சக்தியைத் தரவல்லது இந்த அறிவியல் தொழில்நுட்பத் தகவல் தொடர்பு.

## மருத்துவதில் தகவல் தொடர்பு

வயிற்றினுள் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியின் நிலையினைக் கரு உருவான முதலே அறிந்து கொள்ளும் சாதனங்கள், குழந்தையின் இதயத்துடிப்பினை ஒலி, ஒளியுடன் அறியச் செய்யும் சாதனைகள், அறுவைச் சிகிச்சைக்கு மாற்றாய் செய்யும் உட்காண் அறுவை சிகிச்சை என உடலினுள் இயங்கும் உறுப்புகளின் இயக்க நிலையினை நவீன அறிவியல் தொழில்நுட்ப முறையில் தெரியப்படுத்தும் தலை சிறந்த தகவல் தொடர்பு இன்றைய சமகால தகவல் தொடர்பு.

## கல்வியில் தகவல் தொடர்பு

வீட்டிலிருந்து கற்கும் சூழலில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இணையம் மூலமாக கல்வி மற்றும் கல்வி சார்ந்த வகுப்புகளை அறிய சமகால தகவல் தொடர்பு எளிமையாய் அமைந்துள்ளது. பல்வேறு வகையான அறிஞர்களின் படைப்பினை எளிய முறையில் அறிந்து அதனைப் பயன்படுத்திக் கொள்ள இன்றைய அறிவியல் தொழில்நுட்ப தகவல் தொடர்பு உறுதுணையாய் உள்ளது. பல்வேறு வகையான ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு இவ்வகையான தகவல் தொடர்பு சிறந்த வழிகாட்டியாய் உள்ளது.

## பண்பாடு மானுடவியலில் தகவல் தொடர்பு

இன்றைய கால கட்டங்களில் காலச் சுழற்சிக்கு ஏற்பவும், சூழ்நிலைகள், வாழும் இடங்களுக்கு ஏற்பவும் மனிதர்களின் வாழ்வாதாராங்களை நோக்கிய அன்றாட நகர்வில் பண்பாடு என்பது முந்தைய காலத்தை விட பின்னோக்கியதாக அமைவதாகத் தெரிந்தாலும் மானுடவியலின் அடிப்படையில் அவற்றையும் சேர்த்துத் தாங்கிப் பிடிப்பதாகவே அமைகிறது.

எங்கோ ஒருவர் தான் படிக்கும் படிப்பின் செலவிற்காகவும், தன் பிள்ளைகளின் மருத்துவ செலவிற்காகவும், ஊட்டச்சத்து குறைவினால் உடல் நலம் குன்றியவர்களுக்காகவும் உதவிகள் தேவை எனும் செய்திகள் ஊடகங்களினாலோ, செய்தித்தாள்கலிலோ, செல்லிடைப் பேசிகளினாலோ வரும் பொழுது அங்கு மானுடம் என்பது உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமின்றி உதவும் கரங்களாக பண்பாடு மற்றும் மானுடவியலை சீர்தூக்கிச் செல்லும் ஒரு கூட்டமைப்பாக தகவல் தொடர்பு விளங்குகிறது.

## இன்றைய சமகாலத் தகவல் தொடர்பின் விளைவுகள்

ஒரு செயலின் வளர்ச்சி எவ்வளவாகப் பேசப்படுகிறதோ அதே அளவில் அதன் வீழ்ச்சியையும் அதன் விளைவுகளையும் காண்பது என்பது நடுநிலைமையாகும். அவ்வகையில் இந்த இக்கால தகவல் தொடர்பானது பல வகையான இன்னல்களையும் நன்மைக்குச் சமமாகக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது.

### உதாரணமாக

- சக மனிதர்களிடம் உரையாடல் என்பதும் வீட்டாரோடு; இணைந்து மகிழ்வாக இருக்கும் நேரமும் குறைந்து, தனித்தனியாக செல்லிடைப் பேசியில் மூழ்கி கழிப்பது அதிகரித்துள்ளது.
- முந்தைய காலத்தில் ஒரு செய்தியினை அறிந்து கொள்வதில் ஏற்படும் தாமதமானது அவற்றினைப் பற்றி முழுமையான உண்மையையும், காரணத்தையும் அறிய உதவியாக இருந்தது. இப்போதைய சூழலில் தகவல் தொடர்பினால் அடுத்த நொடியில் வரும் தகவல்களின் உண்மைத் தன்மையையும், காரணமும் தவறாகத் தெரிந்துக் கொள்ளப்படுவதில் அதிக வாய்ப்புகள் உள்ளன

- இளைஞர்களின் வாழ்வானது பெரும்பாலும் இன்றைய இணைய உலகளிலேயே மூழ்கி விடுகிறது. விளையாட்டு, கலந்தரையாடல், பொது சேவை, கலையுணர்வு ஆகியவை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.
- நல்லவைகளோடு தீயவைகளை எளிதில் அறிந்து கொள்ள இன்றைய விரல் நுனி அறிவியல் தொழில் நுட்ப தகவல் தொடர்பு அமைகிறது. இணையத்தினைப் பயன்படுத்தி ஒருவரின் அனுமதியில்லாமலேயே இன்றைய நாளில் அவரின் விவரம், வங்கி கணக்கின் விவரம் ஆகியவற்றை பார்த்து மோசடி செய்ய முடியும் என்றளவுக்கு இன்றைய தொழில் நுட்பம் ஒருவரின் தனிவுரிமையை கேள்விக்குறியாக மாற்றியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

## முடிவுரை

இறுதியாக உளவியலில் தகவல் தொடர்பினை இம்முடிவுரையில் காண்பிப்பது இக்கட்டுரையின் அம்சமாக இருக்குமெனக் கருதுகிறேன். எல்லாப் படைப்புகளும் வாழும் உயிரினங்களுக்கு பொதுவான ஒன்றாகவே அமையும் அவற்றினைப் பயன்படுத்துவது என்பது நம்முடைய மனச்சான்றின்படி பிறர்க்கு நன்மை பயப்பவனாக, முடிந்த அளவு அவ்வாறு நாம் செய்யவும், பயன்படுத்தவும் முற்படும் போது அவை எல்லோருக்கும் நன்மை தருவனவாகவே அமையும். ஆதிகாலத்திலிருந்து தொடங்கி மனிதன் கண்டு பிடித்த அடிப்படையான உண்மைகளை அடித்தளமாக வைத்து தான் இன்றைய கண்டுபிடிப்புகள், அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு முன்னேற்றம் அமைந்துள்ளது. ஆதி மனிதனின் முதல் கண்டுபிடிப்பான தீ சக்கரம், அம்பு-வில் இல்லாமல் இன்று எவையும் கண்டுபிடித்திருக்க முடியாது. சக்கரங்கள் கண்டுபிடியாவிட்டால் உலோகங்களை உருக்கி வார்க்க கற்றறியாவிட்டால் மின் சக்தியை உற்பத்தி செய்யாவிட்டால் பூமியில் இப்போது உள்ள இயக்கமே இராதென்று கூறலாம். அன்றைய சாதனைகளின் துவக்கமும் இன்றைய சாதனைகளின் வெற்றியும் ஒன்றோடு ஒன்று இணைந்து இன்றைய தகவல் தொடர்பாக தொடர்ந்து வருகிறது. அவற்றினோடு நாம் தொடர்ந்து பயணித்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பது நமது உளவியல் வாழ்வில் நம் நடுநிலைமை சார்ந்த வாழ்க்கையை வாழ்வதில் அமையும் எனக்கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## References

Abhirami, K., (2002) Thagaval Tholilnutpam, Chennai Puthaga Aalayam, Chennai, India.

Chenthee Natarajan, S., (2016) Sirpam Thonmam, New Century Book House, Chennai, India.

Keerthi, (2014) Nalvar Thevaram, Aruna Pathippagam, Chennai, India.

Srinivasan, N., (2009) Entha Nalil Andru Thagaval Kalanjiyam, V.K Books International, Chennai, India.

Venkataraman, S., (2008) Aachariyamoottum Ariviyal Thagaval, Bhuvaneswari Pathippagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

M. Selvakumar and M. Mahalakshmi, Changes in Lifestyle in a Contemporary Environment-Communication, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 86-89. DOI: https://doi.org/10.54392/ijmrd223S117